26.09.2024.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

OS. 03/2015

பி.வா.சா.**1**

**<u>பெயர்-</u>** திரு.பாபு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 12.02.1968ல் பிறந்தேன். என் அண்ணன் 1966ல் பிறந்தார். தேதி தெரியாது. என் அண்ணன் சங்கர் என்பவருக்கு கால் கொஞ்சம் ஊனம் என்றால் சரிதான். 15 வயதிலிருந்தே ஊனம் ஆகும். தற்போது அவரால் நேராக நடக்கமுடியாது தாங்கி தாங்கி நடப்பார். எனக்கும் என் அண்ணனுக்கும் பேச்சு வார்த்தை உண்டு. என் சகோதரிகள் மூன்று பேருமே எனக்கு பிறகு பிறந்தவர்கள் என்றால் சரிதான். புவனேஸ்வரி 1ம் வாதி பிறந்தது 1971 ஆகும். செல்வராணி 2ம் வாதி பிறந்தது 1975 ஆகும். 3ம் வாதி அம்சா பிறந்தது 1980 ஆகும். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்து மொத்தம் 5.1/2 ஏக்கர் ஆகும். அதில் நான் பாதியும், சங்கர் பாதியும் அனுபவிக்கிறோம் என்றால் நான் 2.1/4 ஏக்கர் அனுபவிக்கிறேன். என் அண்ணன் 2.1/4 ஏக்கர் அனுபவிக்கிறார். மீதி நிலம் கரம்பாக உள்ளது. இந்த நிலங்களுக்கு போர் மோட்டார், மின் இணைப்பு உள்ளது. அதை நானும், என் அண்ணனும் அனுபவித்து வருகிறோம். இந்த சொத்துக்களில் 2 போகம் பயிரிடுகிறோம். நாங்கள் தானே புயலுக்கு பின்பு அங்கு தென்னைமரங்கள் வைத்து வருகிறோம். அதற்கு முன்பு அங்கு அனைத்து பயிர்களையும் பயிர் செய்தோம்.

**<u>குறுக்கு விசாரணை கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.</u>**